Koviloor Digital Library

விநாயகர் அநுபூதி



Accno: 321179
Q24123 3-2

புலவர் எஸ். சந்தர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்

அறுபதாம் ஆண்டு நிறைவு
மணி விழா

கோவை விஜயா பதிப்பகம்

திருமிகு மு. வேலாயுதம்
திருமதி வே. பெரியநாயகி



9-3-2001 வெள்ளிக்கிழமை பிள்ளையார்பட்டியில்
நிகழ்ந்தபோது வழங்கப் பெற்றது.



32179
KOVILOOR LIBRARY

உமா பதிப்பகம்
37 (71), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 5215363

Koviloor Digital Library

மணிவிழா நாயகருக்கு மங்கல வாழ்த்து!

'விஜயா பதிப்பகம்'
'வேலாயுதம்'

இவை,
ஒருவர் பெயர், முகவரி அல்ல.

'விஜயா பதிப்பகம்' -
பதிப்பாளர்கள் மத்தியில் புதிய ராகம்!

வேலாயுதம் -
அதன் வெற்றியின் இரகசியம்!

ஆலை நகரம் -
பருத்தி நூல் நெய்யும் பஞ்சாலை ஊர் கோவையில்,
படிக்க அறிவு நூல் வழங்கும் பதிப்பகம் விஜயா!

வாசிக்கும் பழக்கம் வளர்க்க
இருநூறுக்கு மேலாக இவர் நடத்திய
வாசகர் திருவிழா
புத்தக விற்பனையில் புதிய பூபாளம்.

சங்கம் வளர்த்த மதுரை மாவட்டம், மேலூர் வட்டம்,
உலகநாதபுரத்தில் இருந்து
கொங்குச் சீமை கோவை வரையிலான
இவர் வாழ்க்கைப் பயணத்தின் ஏணிப் படிகள்,
இவரின் உழைப்பு - முயற்சி என்றால்,
இனிமை - கனிவு இவர் இல்லத்தின் வாசல் படிகள்.

பணிவு - எளிமைக்குப் பதவுரையாக வளரும்
இவரின் வாழ்க்கைப் பேரேட்டில்
வளமே வரவாய் வாழ்வே நிறைவாய் வாழ்க!
வாழ்க பல்லாண்டு! வாழ்க பலகோடி நூறாயிரம்!

அன்புடன்
இராம லட்சுமணன்
உமா பதிப்பகம்

Koviloor Digital Library

விநாயகர் அநுபூதி

(மூலமும் - உரையும்)



வியாக்கியான வித்தகர்
புலவர் எஸ். சந்தர், எம்.ஏ.,



சகுந்தலை நிலையம்
58, ஐயப்ப செட்டிதெரு, மண்ணடி, சென்னை 600001.
தொலைபேசி 5250092

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர் : விநாயகர் அநுபூதி மூலமும் - உரையும்

ஆசிரியர் : புலவர் எஸ். சந்தர், எம்.ஏ.,

மொழி : தமிழ்

முதற்பதிப்பு : செப்டம்பர் - 1999

பதிப்புரிமை : © சகுந்தலை நிலையம்

தாள் : சேஷஷாயி 11.6 வெள்ளைத்தாள்

நூல் அளவு : 12.5 x 18 செ.மீ.

எழுத்து : 12 புள்ளி

பக்கங்கள் : 32

பைண்டிங் : சாதாரணக் கட்டு

விலை : ரூ. 5/-

ஒளி அச்சுக்கோப்பு : விஜி கிராஃபிக்ஸ்
சென்னை - 24.

அச்சிட்டோர் : ஸ்ரீ செல்வ விநாயகா ஆப்செட் பிரஸ்
சென்னை - 14.

நூல் வெளியீடு : **சகுந்தலை நிலையம்**
சென்னை - 1.

Koviloor Digital Library



Koviloor Digital Library

முன்னுரை

'விநாயகர் அநுபூதி' ஓர் அரிய நூல்; பாராயணம் செய்வதற்கு எளிமையானது; மிகச் சிறந்த மகான் ஒருவரால் இயற்றப் பெற்ற நூல்; இஃது விநாயகப் பெருமானைப் போற்றிப் புகழும் நூல் ஆகும். இதை நாள்தோறும் பாராயணம் செய்பவர்கள் எண்ணிய காரியம் ஈடேறப் பெறுவர். இஃது அநுபவத்தில் கண்ட உண்மை. குறிப்பாக, இந்நூலைப் பாராயணம் செய்து அறுகம்புல் கொண்டு விநாயகனை முறையாக வழிபாடு செய்தால் எல்லா உலகியல் செல்வங்களையும் பெறலாம்.

'பூவார் புனிதா'(1) எனத் தொடங்கும் பாடலை மீண்டும் மீண்டும் சொல்லுவோர்க்கு நல்ல நாவன்மை கிடைக்கும். நவக்கிரகங்களினால் உண்டாகும் தீய பயன்களை நீக்கிக் கொள்ள, 'பெருமைப் பரிதி'(22) என்ற பாடலைப் பாராயணம் செய்யலாம். நல்ல பயன் உண்டாகும். அது போல நம்முடைய விதியின் காரணமாக உண்டாகும் தீமைகளை எல்லாம் 'பேழ்வாய்'(7) எனத் தொடங்கும் பாடலைப் பாராயணம் செய்து போக்கிக் கொள்ளலாம். ஐந்து கரத்தனின் பேரருளைப் பெற விரும்பும் பக்தர்களுக்கு இந்த நூல் ஓர் அரிய கருவூலம் என்றே சொல்லலாம். இந்த நிலவுலகத்தில் நாம் பெறுவதற்கரியவற்றை எல்லாம் இந்நூலைப் பாராயணம் செய்வதால் பெறுவது உறுதி.

எனவே விநாயகப் பெருமானுடைய திருவருளை எல்லாரும் பெற்று உய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்தால் இச்சிறு நூல் வெளியிடப் பெறுகிறது. ஒவ்வொருவருடைய வீட்டின் பூசை அறையிலும் இருக்க வேண்டிய நூல் இது. வாங்கிப் படித்து, விநாயகப் பெருமானுடைய பெறுதற்கரிய திருவருளைப் பெறுவீர்களாக!

திருச்சி
18-08-1999

உரையாசிரியர்
புலவர் **எஸ். சந்தர்**, எம்.ஏ.

Koviloor Digital Library

உள்ளே...

நாநலம் பெற	-	7
சொல் வன்மை பெற	-	7
கீழ்மைப் பண்புகள் அழிய	-	8
முழு முதலை உணர	-	8
குருவாய் வந்து அருளுவான்	-	9
பேரின்பம் பெற	-	9
விதியினால் வரும் வேதனை நீங்க	-	10
பேய், பூதம், பில்லி, சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல		10
நல்ல புலமை பெற	-	11
சிறியவனும் அருள் பெற	-	11
புலன்களை அடக்க	-	12
வறுமை நீங்கிச் செல்வம் பெருக	-	12
இப்பிறவிப் பயன் பெற்று வீடு பேறு பெற	-	13
நிறைந்த அருளைப் பெற	-	13
அருட்பாடல்கள் இயற்ற	-	14
செய்த பிழைகள் எல்லாம் தீர	-	14
எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக	-	15
பழைய பாவங்கள் தீர	-	15
வலிமை பெற	-	16
எல்லாச் செல்வங்களும் பெற	-	16
குழந்தைப் பேறும் செல்வமும் பெற	-	17
நவக்கிரகங்களும் நல்லருள் புரிய	-	17
மன அமைதி பெற	-	18
பயமின்றி வாழ	-	18
நலங்கள் பல வந்து சேர	-	19

Koviloor Digital Library

பகை நீங்க	-	19
இதமான வாழ்வு பெற	-	20
நல்ல வழியில் செல்ல	-	20
பிறவித் துன்பம் நீங்க	-	21
அறியாமை அழிய	-	21
நன்மைகள் பெற	-	22
அர்ச்சித்து அருளைப் பெற	-	22
எண்வகைச் சித்திகளைப் பெற	-	23
பிரணவப் பொருளை உணர	-	23
இறை எண்ணம் பெற	-	24
படித்தோர் துன்பம் நீங்க	-	24
நல்ல கவி பாட	-	25
விநாயகனைக் கண்டு மகிழ	-	25
விநாயகனின் அருளைப் பெற	-	26
குறை தீர	-	26
அருள் மழையில் நனைய	-	27
ஆணவம் அகல	-	27
பக்குவம் பெற	-	28
துயரம் நீங்க	-	28
பேரருள் பெற	-	29
கவலைகள் ஒழிய	-	29
ஞானம் பெற	-	30
பிறவி அச்சம் நீங்க	-	30
சகல சித்திகளும் பெற	-	31
புகழைப் பெறுவதற்கு	-	31
உலகம் வாழ	-	32

Koviloor Digital Library

விநாயகர் அநுபூதி

(மூலமும் - உரையும்)

நாநலம் பெற

பூவார் புனிதா! புவனத் தலைமைத்
தேவா! கரியின் சிரமே உளவா!
மூவாத் தமிழால் முறையே உனைஎன்
நாவால் புகழும் நலமே அருளே.

அழகு பொருந்தியவனே! ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவன் ஆனவனே! யானையின் முகத்தைக் கொண்டவனே! நான் உன்னைப் பழைமையான தமிழால் புகழ்ந்து பாடும் வலிமையை எனக்கு அருள்வாய்!

சொல் வன்மை பெற

வில்லாண் மையரும் விரிமா தமிழில்
வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்
நல்லாண் மையது நனியே மிளிரும்
சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!

துரியப் பொருள் ஆனவனே! தோள் வலிமை மிக்கவரும், தமிழில் புலமை மிக்கவர்களும் உன்னைப் புகழ்வார்கள். அவ்வாறே நானும் உன்னைப் பாடச் சொல் வன்மையை எனக்குக் கொடுப்பாயாக!

Koviloor Digital Library

கீழ்மைப் பண்புகள் அழிய

காமா திகளாம் கயமைப் பிணிகள்
போமா(று) அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்
கோமா! கருணைக் குகனார் தமையா!
பூமா! பொலமார் புலவா! வருவாய்!

தலைவனே! முருகனின் சகோதரனே! பூவுலகுக்குத் தலைவனே! ஞான வடிவான புலவனே! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் கீழ்த்தரமான பண்புகள் என் உள்ளத்திலிருந்து போகும்படி அருளி, என் குற்றம் தவிர்த்து, என்னை ஆட்கொள்ளுவாயாக!

முழு முதலை உணர

அத்தே வர்களும் அயன்,மால், அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்,
'கத்தா கரிமா முகத்தான்' எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!

தேவர்கள், திருமால், நான்முகன், சிவ பெருமான், சைவ சித்தாந்திகள் போன்றவர்களால் "வழிபடுவதற்கு உரிய முழு முதற் கடவுள் விநாயகனே ஆவான்!" என்று புகழப்படும் விநாயகனே!

Koviloor Digital Library

குருவாய் வந்து அருளுவான்

காவா எனைஐங் கரனே! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே!
நீவா விரைவாய் நிமலன் புதல்வா!
தாவா கருணைத் தளிர்சே வடியே!

ஐந்து கைகளை உடையவனே! என்னைக் காப்பாய். இனிமையாகப் புலவர்களால் பாடப்படும் குருவே! தூய்மையான வடிவுடைய சிவ பெருமானின் மைந்தனே! நீ வருவாயாக. குற்றமில்லாத கருணையைப் பொழியும் தளிர் போன்ற செம்மையான அடிகளை உடையவனே!

பேரின்பம் பெற

ஒருகொம் புடையான்; உயர்மோ தகமே
விரும்பும் பெருமான்; விடையோன் குமரன்;
சுரும்பார் தொடையன்; சுகமா குமெலாம்
அருள்வான்; அருள்வான்; அடியார் அவர்க்கே!

ஒற்றைக் கொம்பை உடையவன்; மோதகத்தை விரும்பும் பெருமான்; சிவபெருமானின் மைந்தன்; வண்டுகள் மொய்க்கும் மாலையை உடையவன்; அடியவர்களுக்கு இன்பங்களை அருள்வான்.

Koviloor Digital Library

விதியினால் வரும் வேதனை நீங்க

பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்
சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே
ஊழ்வே தனைதீர்த்(து) உளமே மகிழ
வாழ்வே தரும்வல் லபைநா தனரோ!

சிறப்புப் பொருந்திய வாயினை உடைய விநாயகனின் மலர் போன்ற திருவடிகளை அணுகுபவர், பணிந்து வணங்குபவர், புகழ்ந்து பாடுபவர் ஆகியவர்களின் முன்வினைப் பயனைத் தீர்த்து, நல்ல வாழ்வைத் தருபவன் வல்லபையின் நாதனே ஆவான்.

பேய், பூதம், பில்லி சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல

பேய்பூ தமொடு பிலிசூ னியமும்,
பாய்வேங் கையதும் பரையின் அருமைச்
சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்
போய்மாய்ந் திடுமே புனிதம் வருமே!

பராசக்தியின் புதல்வனாகிய விநாயகனது திருப்பெயரைச் சொல்லுபவருக்குப் பேய், பூதம், பில்லி, சூனியம் போன்றவற்றாலும், வேங்கை முதலிய விலங்குகளாலும் விளையும் தீமைகள் போகும். தூய்மையும் வந்தடையும்.

Koviloor Digital Library

நல்ல புலமை பெற

பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும், உயர்செல் வமதும்
நல்காய் நலமாய்; நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்சித் திவிநா யகனே!

அழகான மலர் போன்ற அடிகளை உடைய செல்வனே! சித்தி விநாயகனே! நான் பலவகைக் காப்பியங்கள் இயற்றும் திறமையையும், அழியாத புகழையும், சிறந்த செல்வத்தையும் பெற அருள்வாய்!

சிறியவனும் அருள் பெற

பூந்தார் குழல்,வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே!
தேர்ந்தே தொழுதேன் சிறியேற்(கு) அருளே!

மாலையை அணிந்த கூந்தலையும், வில் போன்ற புருவங்களையும், இளந்தளிர் போன்ற உடலினையும் பெற்றிருக்கும் சித்தி, புத்தி என்ற தேவிமார் இருவரையும் பெற்று எழுந்தருளி யிருக்கும் ஒப்பில்லாத முதல்வனே! உன்னைத் தொழுதேன். சிறியவனாகிய எனக்கும் அருள் செய்வாயாக!

Koviloor Digital Library

புலன்களை அடக்க

வஞ்சப் புலன்என் வசமாய் நிசமாய்க்
கொஞ்சிக் குலவிக் குணமாய் மிளிர
எஞ்சித் தமதில் இனிதே உனது
கஞ்சக் கழல்வை கணநா யகனே!

தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்னை வஞ்சித்துத் தீய வழியில் சேர்க்கும் ஐம்புலன்களும் என் அறிவுக்கு உட்பட்டு நல்ல செயல்களைச் செய்பவையாய் மாறி ஒளி விடுவதற்கு, என் சித்தத்தில் உனது தாமரை போன்ற அடிகளை வைப்பாய்!

வறுமை நீங்கிச் செல்வம் பெருக

பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய்; வளமே தருவாய்;
உல்லா சமிளிர் ஒருகை முகனே!

அழகான துதிக்கையை உடையவனே! பாவங்களைச் செய்யத் தூண்டும் வறுமையையும், கொடிய நோய்கள் எல்லாவற்றையும் அழித்து என்னை ஆண்டு கொள்ள வல்லமை பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு வளங்களைத் தருவாய்.

Koviloor Digital Library

இப்பிறவிப் பயன் பெற்று வீடு பேறு பெற

மகத்தாய், அணுவாய், மதியாய்க், கதிராய்,
செகத்தாய், அறிவாய்த் திகழ்சாட் சியதாய்,
அகத்தும், புறத்தும் அகலாப் பொருளாய்,
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!

பெரியதாயும், அணுவாயும், சந்திரனாயும், சூரியனாயும், சகமாயும், அறிவாயும், நல்வினை தீவினைகளுக்குச் சாட்சியாயும், அகத்திலும் புறத்திலும் அகலாத பொருளாயும், இம்மைப் பயனாயும், மோட்சமாயும் திகழும் விநாயகனே!

நிறைந்த அருளைப் பெற

கருணைக் கடலைங் கரனே! கபிலர்க்(கு)
அருளே கொடுத்தாய்; அபயம் அளித்தாய்!
தருவே அனையாய்! தமியன் தனைஆள்
குருவே பொறுமை குணநா யகனே!

கருணைக் கடலாகத் திகழும் ஐந்து கரத்தோனே! கபிலருக்கு அருளைக் கொடுத்து, அடைக்கலம் தந்தாய். கற்பக மரம் போன்றவனே! தனியனான என்னை ஆளும் குருவே! பொறுமை மிக்க குணங்களுக்கெல்லாம் தலைவனே!

Koviloor Digital Library

அருட்பாடல்கள் இயற்ற

கற்பார் இதயக் கமலத்(து) உறையும்
அற்பார் ஒளியே! அழகுஆ னைமுகா!
பொற்பாய் உனது பொலந்தாள் மலர்க்கே
நற்பா தொடுத்தேன் நனிஏற்(று) அருளே!

கற்பவர்கள் உள்ளத் தாமரையில் ஒளியாக எழுந்தருளுபவனே! அழகிய ஆனை முகத்தவனே! உன் பொன் போன்ற திருவடிகளுக்கு நல்ல பாமாலையை நான் தொடுத்தேன். இதை நீ ஏற்றுக் கொண்டு அருள் புரிவாயாக!

செய்த பிழைகள் எல்லாம் தீர

ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்
சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர!யான்
சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை
ஏற்றே அருள்வாய்! அருள்வாய் இனிதே.

உன் கருணைத் திறம் அறியாத நான் உன் திருவடிகளில் செய்த பிழைகளைத் தீர்ப்பாய்! கோபம் தவிர்ப்பாய்; பரம்பொருளானவனே! நான் இயற்றிய தமிழ் மாலையை உனது துதிக்கையில் ஏற்று அருளுவாய்!

Koviloor Digital Library

எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக

எந்தப் பிறப்பை எடுத்தா லும்உனைச்
சொந்தத் தமிழால் துதிசெய் திடவே
கொந்தே அலர்தாக் குழல்வல் லபையாள்
சிந்தைக்(கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!

மணம் வீசும் மலர் மாலைகளை அணிந்த வல்லபையின் மனத்திற்கு உகந்தவனே! நான் எந்த வகையான பிறப்பினை எடுத்தாலும் உன்னை என்னுடைய தமிழ்மொழியால் போற்றி வழிபட எனக்கு அருள் செய்வாய்.

பழைய பாவங்கள் தீர

சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!
முந்தை வினையை முழுதும் தொலைத்(து)ஆள்
எந்தாய்! எளியேன் எணைநீ எழிலாய்
வந்துஆள்! உயர்ஓ வடிவப் பொருளே!

என் தந்தையே! பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்குபவனே! சிந்தாமணி விளங்கும் மார்பை உடையவனே! முற்பிறப்பு வினைகளை முழுதும் தொலைத்து எளியவனாகிய எனக்கு முன் அழகாகத் தோன்றி வந்து ஆள்வாயாக!

Koviloor Digital Library

வலிமை பெற

பகையார் அவர்முப் புரமே பொடியா
நகைசெய் தபிரான் நலமாம் கனியை
வகையாய் அருள வலம்வந் தவனே!
தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!

முப்புரங்களையும் தன்னுடைய சிரிப்பினால் பொடிசெய்த சிவபெருமான், ஞானப்பழத்தினை உனக்கே கொடுக்கும்படி, அவனையும், உமையம்மையையும் வலம் வந்தவனே! சிறந்த பண்பை உடையவனே! எனக்கு வலிமையைத் தந்தருளுவாய்.

எல்லாச் செல்வங்களும் பெற

சீரோங் கிடும்;நல் திறமும் பெருகும்;
ஏரோங் கிடுமே; இனிதாம் திடமே
பேரோங் கிடும்;நல் பெரும்வே ழமுகன்
தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!

யானை முக விநாயகனின் திருவடிகளைத் தொழுபவர்களுடைய புகழ் ஓங்கும்; நன்மைகள் பெருகும்; அழகு மிகும்; வலிமை மிகுதி ஆகும் என்பது உறுதி.

Koviloor Digital Library

குழந்தைப் பேறும் செல்வமும் பெற

மகப்பே(று) அருள்வான்; மகிழ்வாய் நிதியை
அகத்தே தருவான்; அணியன்; கரிமா
முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்
செகத்தீர் தொழுமின்! தொழுமின்! தினமே!

விநாயகன் குழந்தைப் பேற்றினை அருள்வான்; இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சியுடன் செல்வத்தைத் தருவான்; அவன் அருகிலேயே இருப்பான்; விநாயகனின் திருவடியை முறையாக நாள்தோறும் தொழுவீர்களாக.

நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

பெருமைப் பரிதி, பிறை,இத் தரைசேய்,
அருமால், குருவே, அசுரர் குரவன்,
கருமை அரவு கள்இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களும், விநாயகருடைய திருப் பெயரை உச்சரித்தவர்களுக்கு எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.

Koviloor Digital Library

மன அமைதி பெற

ஓடித் திரிவாய் உலகுஏ ழும்மிக
வாடித் திரிவாய் மனனே! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!

என் மனமே! அமைதியைத் தேடி ஏழு உலகங்களிலும் திரிந்தாய். இது உனக்குப் பொருத்தமுடையது அன்று. ஒற்றைக் கொம்பை உடைய விநாயகனைக் கூடுவாய்! பாடிப் பணிவாய்!

பயமின்றி வாழ

ஏகாக் கரனை எழில்ஐங் கரனைப்
பூகாப் பவனைப், பொறுமைக் குணனை,
மாகா ளியவள் மகனை, மனனே!
நீகா எனவே நிதமும் பணியே!

மனமே! ஓங்கார வடிவை உடையவனை, அழகிய ஐந்துகரங்களை உடையவனை, உலகைக் காப்பவனை, அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனை, சக்தி மகனாகிய விநாயகனை அடைந்து, ‘நீ காப்பாய்!’ என்று நாள்தோறும் பணிவாயாக!

Koviloor Digital Library

நலங்கள் பல வந்து சேர

தேடிப் பணிவார் சிலபேர்; சிறப்பாய்
ஆடிப் பணிவார் சிலபேர்; அணியாய்ப்
பாடிப் பணிவார் சிலபேர்; அவரை
நாடித் தருவான் நலம்ஐ முகனே!

விநாயகப் பெருமானைச் சிலர் தலங்கள் தோறும் தேடிச் சென்று பணிவார்கள்; சில பேர் அவனைப் பாடி, ஆடிப் பணிவார்கள்; சில பேர் கூட்டம் கூட்டமாய்க் கூடிப் பாடிப் பணிவார்கள். இவ்வாறு பக்தி செய்பவர்களைத் தேடிப்போய் விநாயகன் நலன்கள் பலவற்றைத் தருவான்.

பகை நீங்க

துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்
பட்டே இரியப் படையை விடுவாய்!
சிட்டர் புகழும் திறமே! வளரும்
மட்டில் மதமார் மழலைக் களிறே!

பொல்லாதவர்களும், முறையில்லாமல் வாதம் செய்பவர்களும் பொடிப் பொடியாகப் போகும் படி, தன் திருக்கரத்தில் உள்ள படைக்கலத்தை விடுபவனே! நல்லவர்கள் புகழும் உறுதிப் பொருளே! அளவில்லாமல் கருணையாகிய மதநீர் பொழியும் அழகிய விநாயகரே!

Koviloor Digital Library

இதமான வாழ்வு பெற

விண்நீ; உடுநீ; மிளிர்வா யுவும்நீ;
மண்நீ; அனல்நீ; புனல்நீ; மதிநீ;
கண்நீ; மணிநீ; கவினார் ஒளிநீ;
எண்நீ; எனைஆள் இதம்செய் பவனே!

வானும் நீ; அதில் விளங்கும் விண்மீன்களும் நீ; திகழும் காற்றும் நீ; நிலம் நீ; நெருப்பு நீ; தண்ணீர் நீ; சந்திரனும் நீ; இவற்றைக் காணும் கண் நீ; கண்ணினுள் மணி நீ; அதில் ஒளிரும் ஒளி நீ; எண்ணப்படுகின்ற பொருள் நீ; என்னை ஆட்கொண்டு நன்மை செய்பவனே!

நல்ல வழியில் செல்ல

தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே
ஆய நெறியை அறியா திருந்தேன்
தூய நெறியின் தொடர்காட் டினைநீ
ஆயும் நெறியும் அறிவித் தனையே!

விதிவசத்தால் நாத்திகத்தில் உழன்றேன்; உன் அருளைப் பெறும் சன்மார்க்க வழியை அறியாமல் காலம் கழித்தேன்; தூய்மையான பக்தி வழியைக் காட்டினாய். நான் உய்யும் நல்ல வழியை அறிவித்தாய்.

Koviloor Digital Library

பிறவித் துன்பம் நீங்க

தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய்! கரைஏற் றிடும்ஐங் கரனே!

நான் தொடர்ந்து வரும் பிறவியாகிய துன்பக் கடலில் மூழ்கி அழுந்திக் கிடப்பது முறையோ? செல்வனே! பிரமனும் போற்றும் மணியே! நன்மை புரிபவனே! என்னைக் கரை ஏற்றிடும் ஐந்து கரமுடையவனே!

அறியாமை அழிய

மாயை எனும்கார்த் திரையைத் தெரித்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன்;
தாயை நிகர்த்த தனிமா முதல்வன்;
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!

உயர்ந்தவனே! நீ மாயை என்னும் கரிய திரையைக் கிழித்து, என் மனத்தில் தோன்றும் அச்சமாகிய பேயை விரட்டக் கூடிய பெருமான். தாயைப் போன்ற ஒப்பற்ற முதல்வனே! காயையும் கனி ஆக்குவது போல், பக்குவம் இல்லாத என்னையும் பக்குவப் படுத்துபவனே!

Koviloor Digital Library

நன்மைகள் பெற

அயில்கை உளநம் அறுமா முகற்கே
மயிலூர் திதனை மகிழ்ந்தே அளித்தான்;
செயிர்தீர் அடியார் சிறப்பாம் வகையில்
ஒயிலாய் நலம்தந்(து) உயர்த்தும் அவனே.

அடியார்கள் சிறப்படையும்படி நன்மைகளைச் செய்து, அவர்களை உயர்த்துபவன் விநாயகப் பெருமானே ஆவான். அவன் வேலைத் தாங்கிய முருகனுக்கு மயிலை வாகனமாக மகிழ்ந்து அளித்தான்.

அர்ச்சித்து அருளைப் பெற

கரிமா முகனின் கருணை அறியார்
எரிவாய் நரகில் இடரே படுவார்;
விரிமா தவரும் விரும்பும் பெரியோன்
அரிதா அருச்சித்(து) அவனைப் புகழே.

யானை முகத்தவனின் கருணைத் திறத்தை அறியாதவர்கள் வெம்மையான நரகத்தில் துன்பப்படுவார்கள். தவத்தை விரும்பிச் செய்யும் தவசிகள் விரும்பும் விநாயகனை வழிபட்டு அவனைப் புகழுங்கள்.

Koviloor Digital Library

எண்வகைச் சித்திகளைப் பெற

இருநான்(கு) அவதா னம்எண்சித் திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!

உமையம்மையின் மைந்தனான விநாயகன் எட்டு அவதானங்களையும், எட்டுச் சித்திகளையும் விரைவாக வந்து அருளுவான். அத்தகையவனை, மனமே! போற்றுவாயாக!

பிரணவப் பொருளை உணர

கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும், திகழா றெழுத்தும்,
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே; உணர்வாய் மனனே!

இரு வினைகளையும் போக்கும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும், நம: குமராய என்னும் ஆறெழுத்தும், ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்தும், விநாயகனுக்குரிய ஓம் என்னும் ஒரே எழுத்தில் அடக்கம் என்பதை, மனமே! உணர்வாயாக.

Koviloor Digital Library

இறை எண்ணம் பெற

அளவைக் கடந்தான்; அகிலம் கடந்தான்;
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான்;
வளமாம் நிலைமேல் வசிப்பான் பெரியோன்
உளமே அறிந்துஇன் புறவே வருவாய்!

விநாயகன் பிரமாண அளவைகளுக்கு அப்பாற்பட்டவன்; இவ்வுலகைக் கடந்து நின்றவன்; முப்பத்தாறு தத்துவங்களின் உச்சியில் நின்று கடந்து நிற்பவன். அத்தகையவன் என் மனமாகிய இருப்பிடத்தை அறிந்து நான் இன்புறும்படி வர வேண்டும்.

படித்தோர் துன்பம் நீங்க

கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்
தித்தித் திடும்செந் தமிழ்மா லைசெயும்
வித்தர் களின்தீ வினையை விலக்கும்
அத்தித் தலையன் அருட்பார் வையதே!

கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், இனிமையான செந்தமிழால் பாமாலை புனையும் கவிஞர்களின் தீவினைகளை எல்லாம் யானை முகத்தவன் அருட்பார்வை நீக்கிவிடும்.

Koviloor Digital Library

நல்ல கவி பாட

ஆரா அமுதம் எனஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியே!
வாராய்! வளமே வளர்வா ரணனே!

வளமெல்லாம் அளிக்கும் யானை வடிவானவனே! முடிவில்லாத கலைகளால் நிறைந்த கடலே! தெவிட்டாத அமுதம் போன்று ஆசு கவிகளை உன் புகழுக்காக நான் பாடும் ஆற்றலை அருள்வாய்!

விநாயகனைக் கண்டு மகிழ

வேதா கமமே மிகவும் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற்(கு)
ஆதா ர!நின(து) அருட்காட் சிதர
வாதா எழில்‘ஓ’ வடிவா னவனே!

வேதங்களும், ஆகமங்களும் புகழும் திருவடிகளை உடையவனே! தொண்டு செய்பவர்கட்கு ஆதாரமானவனே! அழகான ஓங்கார வடிவானவனே! உனது அருட்காட்சியை எனக்காக வந்து தருவாயாக!

Koviloor Digital Library

விநாயகனின் அருளைப் பெற

உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே! தொழுதேன்; தொழுதேன்;
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனைஆண்(டு) அருளே!

தேவர்களெல்லாம் புகழ்ந்து பேசும் உறுதிப் பொருளே! யானை வடிவானவனே! உன்னைத் தொழுதேன். உன்னையே நம்பும் என்னைக் கைவிட்டு விடாமல் உன் அழகிய பொற்கரத்தால் ஆண்டு கொண்டு அருளுவாய்!

குறை தீர

கவிஞன் புகலும் கவின்ஆர் தமிழ்உன்
செவிஏ றியும்நீ திருகல் சரியோ?
புவிதான் புகழும் புழைக்கை ய!கரம்
குவிவேன்; மகிழ்வேன்; குறைதீர்த்தருளே!

கவிஞர்களால் புகழ்ந்து பேசப்படும் அழகிய தமிழ்ப் பாக்கள் உன் செவிகளில் விழுந்தும் நீ அருளாமல் இருப்பது சரியாகுமா? உலகத்தார் புகழும் தும்பிக்கையை உடையவனே! என் இரண்டு கைகளையும் குவித்தேன்; அதனால் மகிழ்ந்தேன்; என் குறைகளைத் தீர்த்தருளுவாயாக!

Koviloor Digital Library

அருள் மழையில் நனைய

மங்கை வலபை மணவா ளன்அருள்
பொங்கும் புனல்போல் பொழிந்தே புவனம்
எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகாண்!
துங்கக் குணத்தீர்! புசிமின் தொழுதே!

வல்லபையின் கணவனாகிய விநாயகனின் அருள் பொங்கி வெள்ளம் போல் இவ்வுலகமெல் லாம் நிறைந்து காணப்படுகின்றது. விநாயகனின் குணங்களைப் பாடுபவர்களே! அவன் கருணை வெள்ளத்தை வழிபட்டு அனுபவியுங்கள்.

ஆணவம் அகல

மூல மலவா தனைதீர் முதல்வா!
சீல செழும்செம் சடையன் சிவனார்
பால! உயர்தற் பரனே! அருள்தா!
கோலம் மிளிரும் குணமார் பொருளே!

மூல மலமாகிய ஆணவ மலத்தைத் தீர்க்கும் முதல்வனே! அற வடிவான சிவபெருமானுடைய மைந்தனே! உயர்ந்த பரம் பொருளே! அழகொளி வீசும் குணங்களால் நிறைந்த பொருளே! அருள் தருவாயாக!

Koviloor Digital Library

பக்குவம் பெற

சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி னமதில் எனைவந்(து) உறுமோ?
அத்தி முகவா! அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!

யானை முகத்தவனே! பெருமை மிக்க தலைவா! பராசக்தியின் மைந்தனே! பக்குவ ஆன்மாக்களிடம் திருவருள் பற்றுவதாகிய தன்மை எந்த நேரத்தில் என்னிடம் வந்து சேருமோ? எனக்குச் சத்திநிபாதம் வாய்க்கும் நாளை உரைப்பாயாக.

துயரம் நீங்க

முதல்வா படவே முடியா(து) இனிநோ
இதமே அருளா(து) இருத்தல் எனை? பொற்
பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்
புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!

பொற்பாதங்களை உடையவனே! பராசக்தியின் மைந்தனே! அருள்வாய்! குற்றங்களைத் தீர்ப்பவனே! தலைவா! என்னால் இனித் துன்பப் பட இயலாது. என்ன காரணத்தினால் எனக்கு இன்னமும் அருள் புரியாமல் இருக்கிறாய்?

Koviloor Digital Library

பேரருள் பெற

சீலன் துதிக்கைச் சிரனை அனவே
ஞாலத் தினிலே நலம்ஈ வர்எவர்?
கோலச் சிகிவா கனனாம் குகனும்
சாலப் புகழும் தனிமன் அவனே!

யானை முகத்தனைப் போல உலகத்தில் இனி நன்மைகளை அருளுபவர் யார் உள்ளார்கள்? மயில் வாகனனாகிய முருகனாலும் மிகவும் புகழப்படும் ஒப்பற்ற தலைவன் விநாயகனே ஆவான்.

கவலைகள் ஒழிய

திண்தோள் சதுரும், திகழ்ஐங் கரமும்,
வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்
பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்
கண்டேன்; களித்தேன்; கவலை இலனே!

திண்மையான நான்கு தோள்களையும், ஐந்து கரங்களையும், இரண்டு பக்கங்களிலும் சித்தி, புத்தியாகிய தேவிமார் இருவரையும் பெற்ற விநாயகனுடைய அழகிய கோலத்தைக் கண்டேன்; மகிழ்ந்தேன்; கவலைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன.

Koviloor Digital Library

ஞானம் பெற

மோன நிலையில் முழுசித் திபெறும்
ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!
தீனன் எனைஆள் திருமன் கருணைத்
தேனம் எனவே திகழ்கின் றவனே!

அருள்நலம் மிக்க பெரியவனே! அருளாகிய கடல் போன்று திகழ்பவனே! நான் மௌனத்தில் மூழ்கி முழுமையான பரஞானம் பெற அருள்வாய்! அறிவிலியாகிய என்னை ஆள்வாயாக!

பிறவி அச்சம் நீங்க

அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர்ஐங் கர! நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யுடனே பிடித்தேன் இதமே!

சிவன் முதலானவர்கள் புகழும் ஐந்து கரத்தை உடையவனே! உன்னுடைய தளிர் போன்ற திருவடிகளை விருப்பத்துடன் பிடித்துக் கொண்டேன். அதனால், பிறவி அச்சத்தை விட்டேன்.

Koviloor Digital Library

சகல சித்திகளும் பெற

பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்;
முத்தி பெறுவார்; முதன்மை உறுவார்;
சித்தி அடைவார்; திடமே! திடமே!

பக்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் யானை முக விநாயகனின் திருவடிகளில் பணிவார்கள். அதனால் முத்தியைப் பெறுவார். தலைமைப் பதவியைப் பெறுவார். எண் வகைச் சித்திகளையும் பெறுவார். இஃது உறுதி.

புகழைப் பெறுவதற்கு

தாதா சரணம்; சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் சரணம்; நிகர்இல்
வேதா தரனே சரணம்; மிளிர்ஐம்
பூதா சரணம்! புகழ்நாற் புயனே!

தலைவனே! வேதங்களின் பொருளாக விளங்குபவனே! ஐம்பூதங்களானவனே! நான்கு தோள்களை உடையவனே! விநாயகனே! உனது தளிர் போன்ற பாதங்களை நான் சரணடைவதற்குத் தந்தருள்வாயாக!


Koviloor Digital Library

உலகம் வாழ

ஊழி முதல்வன் உயர்வே ழமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!

உலகத்திற்கு முதல்வனான யானைமுகன் வாழ்க! அவனுடைய சித்தி, புத்தி தேவிகள் வாழ்க! அழகு நிறை அவனுடைய மலர்ப் பாதங்கள் வாழ்க! அடியார்கள் செல்வங்கள் பல பெற்று வாழ்க!




KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No. 32179

Koviloor Digital Library

Koviloor Digital Library

எங்களின் பிற நூல்கள்

மங்களம் அருளும் மகாலக்ஷ்மி
அருள்தரும் அரசமர வழிபாடு
ஐஸ்வர்யம் தரும் அம்பிகை 1008 போற்றி வழிபாடு
ஸ்ரீ அபிராமி அந்தாதி (மூலமும் – உரையும்)
கந்தர் கவசங்கள் ஆறு
கந்தர் சஷ்டி கவச விளக்க உரை
வாழ்விக்கும் ஐயப்பன்
ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு
ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி வரலாறு – பாடல்கள்
சண்முக கவசம் விளக்க உரை
ஸ்ரீ லக்ஷ்மி நருஸிம்ஹ வழிபாடு
விநாயகர் வழிபாடு
திருப்புகழ்
ஸ்ரீ சந்தோஷி மாதா
சக்கரத்தாழ்வார் வழிபாடு
விநாயகர் முந்நூல்
நலம் தரும் நவக்கிரக வழிபாடு
அஷ்டோத்ர கதம்பம்
ஸௌந்தர்ய லஹரி
திருமால் வழிபாடு
இந்து தர்மம்
ஸ்தோத்திர திரட்டு
கவசத் திரட்டு

சகுந்தலை நிலையம்
58, ஐயப்பசெட்டி தெரு மண்ணடி, சென்னை-600 001